நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

**முன்னிலை : திரு.P.பிரவீன் ஜீவா, பி.ஏ., பி.எல்.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அம்பாசமுத்திரம்

நீதித்துறை நடுவர், அம்பாசமுத்திரம்(FAC),

2026 ஆம் ஆண்டு மே மாதம் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.426/2025**

(CNR No: TNTLOE–001763–2025)

| | | | |
|---|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | : | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>விக்கிரமசிங்கபுரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.314/2025 |
| 2. | எதிரிகளின் பெயர் | : | 1. சந்தனகுமார், 24/26 (இறப்பு)<br>த.பெ.வெள்ளைசாமி,<br>கொத்தனார்,<br>260, இந்திரா காலனி,<br>மன்னார்கோவில்,<br>அம்பாசமுத்திரம்.<br>2. கணேசமூர்த்தி, 24/26,<br>த.பெ.அன்பழகன்<br>282, இந்திரா காலனி,<br>மன்னார்கோவில்,<br>அம்பாசமுத்திரம்.<br>**(1ம் எதிரி சந்தனகுமார் 5.8.2025ம் தேதி இறந்துவிட்டதாக 14.5.2026ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரி சந்தனகுமார் இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது.)** |
| 3. | எதிரிகளின் தந்தை/கணவர் பெயர் | | |
| 4, | எதிரிகளின் தொழில் | | |
| 5. | எதிரிகளின் முகவரி | | |
| 6. | வயது | | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் | : | 3.7.2025 |

| | | | |
|---|---|---|---|
| 8. | முறையீடு /குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | | 29.7.2025 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | 5.7.2025 |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 5.7.2025 |
| 11. | குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் | : | **இவ்வழக்கின் 1ம் எதிரி இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது.** 2ம் எதிரிமீது 296(b), 351(2), 131 BNS ன் கீழான குற்றச்சாட்டு |
| 12. | 2ம்எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | 2ம் எதிரிமீது பிரிவுகள் 296(b), 131, 351(2), BNS ன் கீழான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| 13. | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| 14. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 13.5.2026 |
| 15. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 15.5.2026. |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 2ம் எதிரிமீது பிரிவுகள் 296(b), 131, 351(2), BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | இறுதியாக, 2ம் எதிரிமீது பிரிவுகள் 296(b), 131, 351(2), BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரியை விடுதலை செய்து |

தீர்ப்பளிக்கப்படுகிறது.

18. தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் : இல்லை

19. காலதாமதத்திற்கான காரணம் : இல்லை.

இவ்வழக்கு 29.7.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 **திருமதி.M.வனிதா.எம்.எல்.,** அவர்கள் முன்னிலையாகியும், குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.M.காசிம்.,** அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை நிலுவையிலிருந்து வந்த வழக்கின் ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 3.7.2025ம் தேதி சுமார் 21.50 மணியளவில் புகார்தாரர் விகேபுரம் லோட்டஸ் பாரா மெடிக்கல் காலேஜிக்கு கீழ்பக்கம் உள்ள அவரது மோனிகா டிபன் கடையில் இருந்தபோது 2ம் எதிரி 1ம் எதிரியுடன் சேர்ந்து வந்து புகார்தாரரை பார்த்து அசிங்கமாக பேசியும், புகார்தாரரின் கடையில் இருந்த ஷேர்களை புகார்தாரரின் பின்னந்தலையில் முதுகிலும் மாறி மாறி அடித்து காயப்படுத்தியும், புகார்தாரரை பார்த்து இன்னைக்கு ஆட்கள் இருந்ததால் தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை சும்மா விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக விக்கிரமசிங்கபுரம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் 193(3) BNSS ன் கீழ் குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கானது 29.7.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தில் பிரிவு 210(1)(b) BNSS ன் படி கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பிரிவு 227 BNSS ன் படி குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

3. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அழைப்பாணை பெற்று முன்னிலையானவுடன், வழக்கின் ஆவண நகல்கள் அனைத்தும் குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு பிரிவு 230 BNSS ன் படி வழங்கப்பட்டன.

4. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மீது வழக்கு விசாரணை தொடர்வதற்கான போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால்,

| | |
|---|---|
| 2ம் எதிரி மீது | பிரிவுகள் 296(b), 131, 351(2) BNS கீழ் |

5. குற்றச்சாட்டு வனைந்து, குற்றச்சாட்டு பற்றி தமிழில் விளக்கி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் தம்மிச்சையாக மேற்கண்ட குற்றச்சாட்டை மறுத்ததால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

6. அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு மொத்தம் 6 சாட்சிகள் சாட்சிகளின் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 மற்றும் அ.சா.4 கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடுசெய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நிகழ்நிலை புகார்தாரர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் சாட்சிகளின் பட்டியலில் குறிப்பிடப்படுள்ள LW.4 முதல் LW.6 வரையிலான சாட்சிகளை அரசு தரப்பில் நீக்கம் செய்ய கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பு சாட்சியமும் அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

7. **அ.சா.1 அருள்ஜெயபிரகாஷ்** அவரது சாட்சியத்தில், எதிரியை தெரியும் என்றும் 2025ம் வருடம் தனக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட தகராறு சம்பந்தமாக தான் காவல்நிலையம் சென்றிருந்த போது போலிசார் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும், புகார்மனுவிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், தற்போது தாங்கள் சமாதானமாகிவிட்டதாகவும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. **அ.சா.2 சுப்புலெட்சுமி மற்றும் அ.சா.3 அலெக்ஸ் வேதநாயகம்** அவர்களது சாட்சியத்தில், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும், வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை எனவும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை எனவும் சாட்சியமளித்துள்ளார்கள்.

9. **அ.சா.4 நாகராஜன்** உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில், கடந்த 4.7.2025ம் தேதி 20.30 மணிக்கு தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருந்த போது விகேபுரத்தை சேர்ந்த எட்வர்ட்டு மகன் அருள்ஜெயபிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 314/2025 பிரிவுகள் 296(பி), 351(2), 115(2) BNS கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் 4.7.2025ம் தேதி 21.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அலெக்ஸ் வேதநாயகம் மற்றும் ஜார்ஜ் ஜோசப் ஆகியோர்கள் முன்பு இவ்வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் ஆகியவர்களை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சாட்சியங்களின் வாக்குமூலத்தில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால்

எதிரிகளை 5.7.2025ம் தேதி காரணம் கூறி கைது செய்தும், காயம்பட்ட சாட்சி தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு வீட்டிலிருந்தபடியே நாட்டு வைத்திய முறைப்படி சிகிச்சை எடுத்துகொண்டதால் வழக்கின் சட்ட பிரிவை 296(பி), 351(2), 115(2) BNS லிருந்து 296(பி), 351(2), 131BNS ஆக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, வழக்கின விசாரணை முடித்து எதிரிகள் மீது 5.7.2025ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார்.

10. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவிய போது எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய் சாட்சி என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் கூறினார்கள்.

11. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவருடைய வாதத்தில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை என்றும், இருந்தபோதிலும் கூடுதலாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 நாகராஜன் உதவி ஆய்வாளர் அவர்கள் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கானது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகவே 2ம் எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கும் படியும் வாதிட்டார்.

12. 2ம் எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்கள் மூலம் 2ம் எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யவில்லை என்றும், நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். 2ம் எதிரிக்கு எதிராக அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் சாட்சியமளிக்காத காரணத்தினால் சந்தேகத்தின் பலனை 2ம் எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யவேண்டுமென வாதுரைத்தார்.

13. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 2ம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள 296(b), 131, 351(2)BNS கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்குஇடமின்றி நீருப்பிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

14. கடந்த 3.7.2025ம் தேதி சுமார் 21.50 மணியளவில் புகார்தாரர் விகேபுரம் லோட்டஸ் பாரா மெடிக்கல் காலேஜிக்கு கீழ்பக்கம் உள்ள அவரது மோனிகா டிபன் கடையில் இருந்தபோது 2ம் எதிரி 1ம் எதிரியுடன் சேர்ந்து வந்து புகார்தாரரை பார்த்து அசிங்கமாக பேசியும், புகார்தாரரின் கடையில் இருந்த ஷேர்களை புகார்தாரரின் பின்னந்தலையில் முதுகிலும் மாறி மாறி அடித்து காயப்படுத்தியும், புகார்தாரரை பார்த்து இன்னைக்கு ஆட்கள் இருந்ததால் தப்பிச்சிட்ட என்னைக்கிருந்தாலும் உன்னை சும்மா விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 2ம் எதிரி மீது 296(பி), 131, 351(2) BNS ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**<u>2ம் எதிரி மீதான 296(b), 131, 351(2)BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள்.</u>**

15. இவ்வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அருள்ஜெயபிரகாஷ் நிகழ்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.2 சுப்புலெட்சுமி கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.3 அலெக்ஸ் வேதநாயகம் பார்வை மகஜர் சாட்சி ஆவார். அ.சா.4 நாகராஜன் உதவி ஆய்வாளர் 2ம் எதிரிமீது முதல் பதிவு செய்தது பற்றியும், வழக்கின் புலன் விசாரணை முடித்துகொண்டு 2ம் எதிரிமீது இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.4 திரு.நாகராஜன் காவல் உதவி ஆய்வாளர் என்பவரை கூடுதலாக விசாரிக்ககோரி அரசு தரப்பில் 348 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

16. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் அ.சா.4 உதவி ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் புலன் விசாரணை குறித்து விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 உதவி ஆய்வாளர் நாகராஜன் சாட்சியத்திற்கு ஒத்துரைத்து எந்த சாட்சியங்களும் காணப்படாததால் அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக வைத்துக்கொண்டு எதிரிகள்தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்று தீர்மானிக்க இயலாது.

17. நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளதுபோல் சாட்சியமளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பாடாக சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 2ம் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சிகளை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

18. நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதராவாக சாட்சியமளிக்காத காரணத்தினாலும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியமளித்துள்ளதாலும் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார் என்பதனை நிரூபிப்பதற்கு அரசு தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாத காரணத்தினாலும், புலன் விசாரணை அதிகாரி சார்பாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 சாட்சியத்தினை மட்டும் வைத்துக்கொண்டு 2ம் எதிரி குற்றம் புரிந்துள்ளார் என்று கருதமுடியாது. 2ம் எதிரிக்கு எதிராக எந்தவித சாட்சியங்களும் அமையாத நிலையில் அரசு தரப்பில் 2ம் எதிரி மீது சுமத்தப்படுள்ள BNS பிரிவுகள் 296(b), 131, 351(2)ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூப்பிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

19. இறுதியாக 2ம் எதிரியை பிரிவுகள் 296(b), 131, 351(2) BNS ன் கீழ் குற்றவாளி இல்லையென முடிவு செய்து மேற்படி பிரிவுகளிலிருந்து 2ம் எதிரியை பிரிவு 271(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் எழுதி கொடுத்த பிணையமுறி இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.5.2026-ம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Uploaded on 19.5.2026
PRAVEENJEEVA P
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.05.19 13:10:05 +0530

நீதித்துறை நடுவர்(FAC),
அம்பாசமுத்திரம்.

**1. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி பட்டியல் (திரு/திருமதி/செல்வி)**

| | |
|---|---|
| அ.சா.1 | அருள்ஜெயபிரகாஷ் |
| அ.சா.2 | சுப்புலெட்சுமி |
| அ.சா.3 | அலெக்ஸ்வேதநாயகம் |
| அ.சா.4 | நாகராஜன் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 4.7.2025 | புகார்மனுவிலுள்ள அ.சா.1 நாராயணன் என்பவரின் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 4.7.2025 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 4.7.2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 4.7.2025 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ 5 | 4.7.2025 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ 6 | 7.7.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**3. அரசு தரப்பில் சான்று பொருள் :** இல்லை

**4. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

PRAVEENJEEVA P

Uploaded on 19.5.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.05.19 13:09:56 +0530

நீதித்துறை நடுவர்(FAC),

அம்பாசமுத்திரம்.

**CASE SUMMARY CASE NO.426/2025**
ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE OF AMBASAMUDRAM.

**Case Summary:**

| | | | |
|---|---|---|---|
| 1 | The Period of Remand of the Accused | : | 5.7.2025 |
| 2 | Date of filing of the Complaint/Final Report in the Court | : | 29.7.2025 |
| 3 | The date of Commital of the Case to the court of session | : | Not applicable |
| 4 | First Questioning u/s 240 of crpc | : | 13.5.2026 |
| 5 | Filling of Miscellaneous petition and result | : | u/s 348 of BNS petition is allowed on Dated:14.5.2026.<br>u/s 359 of BNS petition is dismissed on Dated:14.5.2026. |
| 6 | Date of Examination in chief and Cross examination of witness. | | |
| | PW 1 Chief and Cross | : | 14.5.2026 |
| | PW 2 Chief and Cross | : | 14.5.2026 |
| | PW 3 Chief and Cross | : | 14.5.2026 |
| | PW 4Chief and Cross | : | 14.5.2026 |
| 7 | Questionings u/s 351(i)(b) of BNSS. | : | 15.5.2026 |
| 8 | Details of Abscondence of an accused and his appearance/production | : | Nil |
| 9 | Grant of stay by superior courts and the results there of | : | Nil |

Uploaded on 19.5.2026

PRAVEENJEEVA P

Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.05.19 13:09:47 +0530

நீதித்துறை நடுவர்(FAC),
அம்பாசமுத்திரம்.